உ

சிவமயம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்

சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட

## திரு. செல்லம் இராசக்கோன்

## அவர்கள் சிவபத மெய்தியமை குறித்த

# நினைவு மலர்

01-10-2001

உ

சிவமயம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்

சரசாலையை வதிவிடமாகவும் கொண்ட

## திரு. செல்லம் இராசக்கோன்

## அவர்கள் சிவபத மெய்தியமை குறித்த

# நினைவு மலர்

01-10-2001

உ

சிவமயம்



**தோற்றம்**
05-04-1905

**மறைவு**
01-09-2001

## திதிவெண்பா

ஆண்டது விஷு வருஷசார்ந்த ஆவணி பதினாறில்
பூண்டது சதுர்தசி திதியில் புவியை விட்டு
புகழ் மிக்க செல்லம் இராசக்கோன்
பரமனடி சேர்ந்த தினம்.

சிவமயம்

## சிவபதமெய்திய திரு. செல்லம் இராசக்கோன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

மன்னுபுகழ் யாழ்ப்பாணத்து மட்டுவில் பழம் பதியில் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரப் பெருமானைப் போற்றி வாழ்ந்த பெருங்குடி மரபுளோன் சின்னத்தம்பி செல்லமும் அப்பதியில் வழிவந்த செம்மணச் சிறப்புடைய குழந்தைவேலு ஆச்சிமுத்து அன்னையும் செய்த தவப்பயனாய், அவர்களது உறைவிடமாகிய அச்சுவேலியில் உதித்த நால்வருள் மூன்றாவது புத்திரனாய் உதித்தவர் செம்மல் இராசக்கோன். திருமதி இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளையை அன்புச் சகோதரியாகவும், இரத்தினம், திரவியம் ஆகியோரைச் சகோதரர்களாகக் கொண்டவர். இளமையிற் கற்கவேண்டியவற்றை நன்கு கற்று மட்டுவிலில் தந்தையின் நிலவளம் பெருக்கி கமத்தொழிலை மேற்கொண்டவர்.

இவர் தமது இருபதாவது பராயத்தில் சரசாலையைச் சேர்ந்த திரு. கந்தையாவினதும் திருமதி பொன்னுவினதும் ஐந்தாவது புத்திரியாகிய தெய்வநாயகியை மணந்து நல்லறமென்னும் இல்லறப் பயனாய் குழந்தைவேலு, சின்னத்தம்பி விவேகானந்தர் சாந்தநாயகி, மனோன்மணி, சதாயக்தி, யோகானந்தன் ஆகிய நன்மக்களைப் பெற்றெடுத்து, கல்விச் செல்வத்தைச் சிறப்புறளித்ததன் பயனாய் மூத்த மகன் பாடசாலை அதிபராகவும், இரண்டாவது மகன் நில அளவையாளராகவும், மூன்றாவது மகன் ஆசிரியராகவும், மகளவை இருவரும் சிறப்புறக் கல்வி பயின்றும், ஐந்தாவது மகன் நில அளவையாளராகவும், கடைசி மகன் சுங்கத் திணைக்கள உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினர். பிள்ளைகட்கு உரிய பருவத்தில் மணம் முடித்து பவானியம்மா (ஆசிரியை),

பரமேஸ்வரி, ஞானாம்பிகை, குமரகுரு (பாடசாலை அதிபர்) ஆதித்தன் (வர்த்தகர்), சரஸ்வதி, புவனேஸ்வரி ஆகிய எழுவரையும் மாசிலா மருமக்களாகப் பெற்றவர். இதன் பயனாய் பதினெட்டு பேரப்பிள்ளைகளையும், பன்னிரண்டு பூட்டப் பிள்ளைகளையும் கண்டுகளித்தவர்.

இவரது அன்புச் சகோதரியின் புத்திரிகள் நாகபூஷணி, பார்பதி, பொன்னம்மை யோகாம்பிகை சிவயோகநாயகி புத்திரன் யோகீந்திரனையும் அன்புடைய மருமக்களாகக் கொண்டவர்.

இவர் உற்றார், உறவினர் அயலவர் யாவரையும் அன்பாக மதித்து வந்தவர். இவர், இல்லறத்தை இயற்றி இன்புற வாழ்ந்து, எத்துயருமில்லாது தமது தொண்ணூற்றாறாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



உ

சிவமயம்



# இறைதுதிப்பாக்கள்

## விநாயகர் துதி

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின்முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மீண்டுமனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்ம்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள்-அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியேமாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ
சிவமயம்

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும்
நிமல ரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையநடஞ் செயும் மயில்வாகனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக.

ரஹண பவச ரரரர ரரர

ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி

விணபவ சரஹண வீரா நமோ நம

நிபவ சரஹண நிறநிற நிறெண

வசர ஹணப வருக வருக

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

என்னை யாளு மிளையோன் கையில்

பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்

உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்

கிலியும் சௌவும் கிளரொளி யையும்

நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்

குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறுமுகமும் அணிமுடி யாறும்

நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்

பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஈராறு செவியில் இலகு குண்டலமும்

ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்

செப்பழ குடைய திருவயி றுந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்

நவரத்னம் பதித்த நற்சீ ராவும்

இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

செககண செககண செககண செகண

மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டகுழ குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழங்கால் கதிர்வேல் காக்க

ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிர வேல் காக்க
அரையிரு தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் ஷதரும்

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்பச் சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகு பலபேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அருப்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தானெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புப் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசுஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வா ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நற்றாய்

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராஜன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்

கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யால் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்தன் துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

கந்தசஷ்டி கவசம் முற்றிற்று.

# வம்சா

- சின்னத்தம்பி செல்லம் + ஆச்சிமுத்து
  - இராசமுத்து + செல்லையாப்பிள்ளை
  - இரத்தினம்
  - இராசக்கோன்
  - திரவியம்

---

- குழந்தைவேலு + பவானியம்மா
  - பாஸ்கரன் + கமலராணி
    - குருபரன்
    - நிஷாந்தன்
  - வாகீசன் + சாந்தினி
    - டிவாகர்
    - டிலக்ஷன்
  - ஞானேந்திரி + கயிலாயபதி
    - சுதாகர்
    - யாழினி
  - தேவரஞ்சன் + மணிமேகலை
  - நந்தபூபன் (சிங்கப்பூர்) + நிரஞ்சனா
    - சாயிந்தியா
- சின்னத்தம்பி (கனடா) + பரமேஸ்வரி
  - விமலேந்திரன் (அமெரிக்கா)
  - துஷ்யந்தி (கனடா) + பிரகாஸ்
    - வித்தியா
  - தமயந்தி (கனடா) + கணேஸ்
    - திவ்வியா
- விவேகானந்தர் + ஞானாம்பிகை
  - சண்முகநாதன் + யசோதை
    - கஜானன்
    - வைஷாலினி
  - குகநாதன் (சுவிஸ்)
  - வா… + நந்தகு…
    - கஜேந்தி…

# சாவழி

வேலுப்பிள்ளை கந்தையா
+
பொன்னு

- அன்னப்பிள்ளை
- செல்லம்
- நல்லபிள்ளை
- வேலுப்பிள்ளை
- தெய்வநாயகி

சாந்தநாயகி
+
குமரகுரு
- கணேசநாதன் (பிரான்ஸ்)
- யசோதை + சண்முகநாதன்
  - கஜானன்
  - வைஷாலினி
- ஆறுமுகன்

மனோன்மணி
+
ஆதித்தன்

சதாபத்தி (கனடா)
+
சரஸ்வதி
- சத்தியவதி (கனடா)
- சந்திரவதி (கனடா)

யோகானந்தன்
+
புவனேஸ்வரி
- டிலுஷன்

ன் வாசுகி
+
நந்தகுமார்
- கஜேந்திரன்

ன் (...ூர்)

ா

யா

யோகேந்திரி

# நன்றி நவிலல்

01-09-2001 இல் சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் செல்லம் இராசக்கோன்
அவர்களின் மறைவுச் செய்தி
கேட்டு வருகை தந்து எமது துயரிற்
கலந்துகொண்டோருக்கும், ஆறுதல் கூறித்
தேற்றியோருக்கும், பலவழிகளிலும் உதவிபுரிந்
தோருக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வு
களில் கலந்து சிறப்பித்தோருக்கும், கிரியாதி
களை நன்றாற்றிய சிவாச்சாரியப் பெருமக்
களுக்கும் நினைவுச் சுடரை அச்சேற்றி
உதவிய மஹாத்மா அச்சகத்தா
ருக்கும் எமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவிக்கின்றோம்.



அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
01-10-2001

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

★ ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம். ★